Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 1/2011

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : பால்ராஜ் | Father/Husband Name | : முனியசாமி |
| Age | : | Calling | : |
| Date | : 05.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05 day of 02.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் சிட்டம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். பலசரக்கு கடை வைத்துள்ளேன். அசா1 ராமசாமியை தெரியும். கடந்த 29.11.2008 ம் தேதி எனது கடையின் அருகே உள்ள ராமசாமி என்பவரின் வீட்டில் நகை திருட்டு போன சம்மந்தமாக மறுநாள் அவரது வீட்டில் போலீசார் வந்து சோதனை செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார்கள். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரிவரைபடம் தயார் செய்தபோது நான் உடன் இருந்தேன். என்னிடம் தற்போது காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).** பார்வை மகஜரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அதேபோல் நான் வைத்துள்ள கடையை எத்தனை மணிக்கு திறந்து, எத்தனை மணிக்கு அடைப்பேன் என்றால் காலை 07.00 மணிக்கு திறந்து இரவு 08.30 மணிக்கு

அடைப்பேன். பட்டியல் சாட்சி தேவராஜ் எனது கடையில் இருப்பாரா என்றால் இல்லை. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். பார்வை மகஜரில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது கடை அருகே சிமென்ட் ரோடு உள்ளதா என்றால் ஆம். அந்த சிமென்ட் ரோடு தென்வடக்காக உள்ளதா என்றால் சரிதான். எனது கடை சிமென்ட் ரோட்டின் மேற்கு பகுதியிலும், அசா1ன் வீடு சிமென்ட் ரோட்டின் வடமேற்கு பகுதியில் உள்ளது என்றால் அசா1ன் வீடு ரோட்டின் மேற்கு பகுதியில் உள்ளது. போலீசார் என்னிடம் கேட்டுக்கொண்டதற்காகவும், அசா1 எனது வேண்டப்பட்டவர் என்பதாலும், சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் வாங்காமல், எனது கடையில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல, அசா1ன் வீட்டில் வைத்துதான் கையொப்பம் செய்தேன். அசா1 எனது வேண்டியவர் என்பதனால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.